யேல்-என்யுஎஸ் கல்லூரி மாணவர்கள் தொடர்பான ஆய்வில் தகவல்

# 10ல் 9 பட்டதாரிகளுக்கு ஆறு மாதங்களில் வேலை

யேல்-என்யுஎஸ் பட்டதாரிகளில் 10ல் 9 பேருக்கு ஆறு மாதங்களில் வேலை கிடைத்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது.

அவர்களில் இளநிலை அறிவியல் ஹானர்ஸ் பட்டம் பெற்றவர்களின் இடைநிலை மொத்த மாதச் சம்பளம் $5,350 ஆக இருந்தது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் இதர பட்டதாரிகளைக் காட்டிலும் இந்த வருமானம் அதிகம் என்று யேல்-என்யுஎஸ் கல்லூரியின் அறிக்கை குறிப்பிட்டது.

இருந்தபோதிலும், 30க்கும் குறைவான பட்டதாரிகளை மாதிரியாகக் கொண்டு இந்த சம்பளத் தொகை கணிக்கப்பட்டுள்ளதாக அது தெரிவித்தது.

என்யுஎஸ் பட்டதாரிகளை மட்டும் கணக்கில் கொண்டால் புதிதாக உருவான வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் கணினி பட்டதாரிகள் ஆகியோரின் தொடக்கநிலை சம்பளமும் $5,000 என்ற அளவுக்கு நெருக்கமாகவே இருந்தது. அதேநேரம் அறிவியல், கலைகள் போன்ற பொதுவான பிரிவுகளில் பட்டம் பெற்றவர்கள் குறைவான சம்பளம் ஈட்டுகின்றனர். குறிப்பாக, ஹானர்ஸ் பட்டம் பெறாதவர்களுக்குக் குறைவான சம்பளம் கிடைத்தது.

இளங்கலை ஹானர்ஸ் பட்டதாரிகளின் இடைநிலை மொத்த சம்பளம் $3,890லிருந்து தொடங்குவதாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவித்தது.

கிட்டத்தட்ட தனது எல்லா பட்டதாரிகளும் வெவ்வேறு துறைகளில் வேலையில் அமர்ந்துவிட்டதாகவும் அது கூறியது. தகவல் தொழில்நுட்பம், ஆலோசனைச் சேவைகள், நிதிச் சேவைகள், கல்வித் துறை, பொதுத் துறை போன்றவை அவற்றுள் சில.

2011ல் தொடங்கப்பட்ட சிங்கப்பூரின் முதல் தன்னாட்சி கலைக் கல்லூரியான யேல்-என்யுஎஸ்ஸில் புதிதாக பட்டம் முடித்த 187 பேரில் 147 பேர் வருடாந்திர பட்டதாரி வேலைவாய்ப்பு ஆய்வில் கலந்து கொண்டனர். அந்த ஆய்வின் முடிவுகள் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டன. மொத்தத்தில் 11,800 பேரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. கடந்த ஆண்டில் பட்டக்கல்வி முடித்த குறைந்த அளவு மாணவர்களுக்கே முழுநேர வேலை கிடைத்ததாக ஆய்வின் முடிவில் தெரிய வந்தது. சிறப்பு நிலை பெறாத பிரிவுகளின் மாணவர்கள் கொவிட்-19 கொள்ளைநோயின் தாக்கத்தை அதிகமாக உணர்ந்தையும் தகவல் தொழில்நுட்பம், சுகாதார அறிவியல் போன்ற அதிகம் கவனிக்கப்படும் படிப்புகளில் பட்டம் பெற்றோருக்கு வேலை நியமனத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டதையும் ஆய்வு கண்டறிந்தது.

தங்கள் கல்லூரியில் வெவ்வேறு பட்டக்கல்வி பயின்றோர் சவால்களைக் கடந்து மீள்திறன் பெற்றதாக யேல்-என்யுஎஸ் கல்லூரியின் தலைவர் டான் டாய் யோங் கூறினார்.

குறிப்பாக, கொரோனா கிருமிப் பரவலால் இறுதிப் பருவத் தேர்வுகளில் இடையூறுகளைச் சந்தித்தோடு பரவல் உச்சத்தில் இருந்த போது வேலை தேடும் நிலையில் இருந்ததாக அவர் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.